அறிவிக்கை எண் – 01 /2016

| | |
|---|---|
| | **தமிழ்நாடு அரசு**<br>**பட்டு வளர்ச்சித்துறை, சேலம் –7.** |

**நேரடி நியமனம் மூலம் உதவி பட்டு ஆய்வாளர் மற்றும் இளநிலை பட்டு ஆய்வாளர் பணியிடம் நிரப்புவதற்கான விளம்பர அறிவிக்கை.**

தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறையில் தமிழ்நாடு தொழிற்சார்நிலைப் பணியின்கீழ் காலியாக உள்ள உதவி பட்டு ஆய்வாளர் மற்றும் இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு துறைமூலம் 09.05.2015 மற்றும் 16.05.2015 ஆகிய தேதிகளில் தினத்தந்தி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. தற்பொழுது, 16.05.2015 நாளிட்ட அறிவிக்கை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி ரத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே, 2014–15 ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிடங்களுடன் சேர்த்து நடப்பு ஆண்டில் (2015–16) நிரப்பப்பட வேண்டிய காலிப்பணியிடங்களுக்கும் கீழ்வரும் விவரங்களின்படி நேரடி நியமனம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து **இணைய வழி (Online -** www.sericultureexam.com.)மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஏற்கனவே 09.05.2015 செய்திதாள்களில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் அடிப்படையில் பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருப்பதற்கான செல்லத்தக்க சான்றிதழ் இணைத்து அனுப்பியவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க தேவையில்லை. இதர விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட தேர்வு கட்டணம், விண்ணப்ப கட்டணம் நீங்கலாக மீள அனுப்பி வைக்கப்படும். மனுதாரர்கள் செல்லத்தக்க சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவில்லையெனில், செல்லத்தக்க சான்றிதழ்களுடன், விண்ணப்ப கட்டணம் செலுத்தி இணையதளம் மூலம் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

| வ. எண் | பதவியின் பெயர் | மொத்த பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1) | உதவி பட்டு ஆய்வாளர் | 43 | ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4200 |
| 2) | இளநிலை பட்டு ஆய்வாளர் | 257 | ரூ.5200 – 20200 + தர ஊதியம் ரூ.2400 |
| | மொத்த பணியிடங்கள் | 300 | |

**2. முக்கிய தேதிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| அறிவிக்கை நாள் | : | 13 .01.2016 | | |
| விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | : | 27.01.2016 | | |
| விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | : | 27.01.2016 | | |
| பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப நகல் மற்றும் வங்கி வரைவு இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் கடைசி நாள் | : | 28.01.2016, பிற்பகல் 5.45 மணிவரை | | |
| தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | : | இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிகளுக்கு | 07.02.2016 | முற்பகல் 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை |
| | | உதவி பட்டு ஆய்வாளர் பதவிகளுக்கு | 07.02.2016 | பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை |

## 3. தகுதிகள்

### அ. வயது (01. 07.2015 அன்றைய தேதியில் )

| வ. எண் | விண்ணப்பதாரர்கள் இன வகைகள் | குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது | |
|---|---|---|---|---|
| | | | உதவி பட்டு ஆய்வாளர் | இளநிலை பட்டு ஆய்வாளர் * |
| 1) | ஆ.தி., ஆ.தி. (அ), பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | உச்ச வயது வரம்பு இல்லை | 35 வயதுக்குள் |
| 2) | மி.பி.வ./ சீ.ம., பி.வ. மற்றும் பி.வ. (முஸ்லீம்) | | | 32 வயதுக்குள் |
| 3) | ஏனைய வகுப்பினர் (மேற்குறிப்பிட்ட பிரிவினர் தவிர) | | 30 வயதுக்குள் | 30 வயதுக்குள் |

* இளநிலை ஆய்வாளர் பதவிக்கு வ.எண் 1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்ட பிரிவினர்கள் பதவிக்குரிய கல்வித்தகுதியை விட கூடுதல் கல்வித்தகுதி பெற்றிருப்பின் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பு சலுகைகளுக்கு நடைமுறையிலுள்ள அரசு ஆணை எண் (நிலை) 704, பொதுத் (சிறப்பு –எ) துறை, நாள் 10.04.1964 பொருந்தும்.

### ஆ. கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் ( 13.01.2016 அன்றைய தேதியில்)

| வ. எண் | பதவி | கல்வித்தகுதி | மற்றும் இதர தகுதிகள் |
|---|---|---|---|
| (அ) | உதவி பட்டு ஆய்வாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் மூலம் வழங்கப்பட்ட தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது வேதியியலை முதன்மை பாடமாக கொண்ட இளம்அறிவியல் பட்டப்படிப்பு | **அ) பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் **(அல்லது)** ஆ) ஒசூர், அரசு பட்டு பயிற்சிப் பள்ளியில் பட்டதாரிகளுக்கான 6 மாத பட்டு வளர்ப்பு பயிற்சியினை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். **(அல்லது)** இ) கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் பட்டு வளர்ப்பில் முதுநிலை பட்டய படிப்பு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| (ஆ) | இளநிலை பட்டு ஆய்வாளர் | பள்ளியிறுதி தேர்வில் பொது அறிவியலை ஒரு பாடமாக கொண்டு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | **அ) பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் **(அல்லது)** ஆ) ஒசூர் அரசு பட்டு பயிற்சிப் பள்ளியில் பட்டதாரி அல்லாதவர்களுக்கான 6 மாத பட்டு வளர்ப்பு பயிற்சியினை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். |

** கீழ்வரும் அலகுகளில் பெறப்பட்ட பட்டு வளர்ப்பில் செயல்முறை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் அவை பட்டு வளர்ப்புக்கு (Sericulture) போதிய (appropriate) தகுதிகளாக கருத இயலாது. எனவே, இத்தகைய சான்றிதழுடன் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்
- தனியார் பட்டு பல்நோக்கு (private poli-clinic centres) மையங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்.
- தனியார் பட்டு நூற்பு மையங்கள் மற்றும் தனியார் பட்டு முறுக்காலைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்
- தனியார் பட்டு வித்தகங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்.

**4. விண்ணப்ப கட்டணம்**

விண்ணப்ப கட்டணமாக ரூ.**500/–** (ரூபாய் ஐநூறு மட்டும்) செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து எந்த இனத்தை சார்ந்தவர்களுக்கும் விலக்கு அளிக்கப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அலுவலகத்திலிருந்து பரிந்துரை செய்யப்படும் நபர்களும் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அவர்களும் ரூ.**500/–** (ரூபாய் ஐநூறு மட்டும்) விண்ணப்ப கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**5.** மேலும், பொது விவரங்கள், விண்ணப்பக் கட்டணம் செலுத்தவதற்கான வழிமுறைகள், தகுதிக்கான நிபந்தனைகள் பாடதிட்டம் மற்றும் தேர்வு முறை, காலிப்பணியிடங்கள் இனவாரியான எண்ணிக்கை, தேர்வு மையங்கள், விண்ணப்பிக்கும் முறை, தடையின்மை சான்றிதழ், சலுகைகள், ஏனைய முக்கிய அறிவுரைகள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான விவரங்களை, விண்ணப்பதாரர்கள் பட்டு வளர்ச்சித்துறை இணையதளத்தில் www.sericultureexam.com. காணலாம்.

**6.** இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிக்கான இறுதி தேர்வு முடிவுகள், சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனுக்கள் WP. 28193/2014 மற்றும் WP. 28206/2014 மீதான இறுதி தீர்ப்பாணைக்கு உட்பட்டது.

**இயக்குநர்**
**பட்டு வளர்ச்சித்துறை, சேலம்.**